*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **23 ஆகஸ்ட், 2025**

**பத்திரிகை செய்தி**

இந்திய வம்சா வழியினரின் உலகளாவிய அமைப்பு (கோயியோ) சார்பில் சர்வதேச வணிக மாநாடு மற்றும் கண்காட்சி புதுச்சேரி பழைய துறைமுக வளாகத்தில் இன்று (23-08-2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டினை தொடங்கி வைத்து கண்காட்சியைப் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு உள்துறை மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு ஆ. நமச்சிவாயம், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சுற்றுலா அமைச்சர் திரு க. லட்சுமிநாராயணன், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் “கோயியோ” அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- இந்திய வம்சாவழியை சார்ந்தவர்களும் வெளிநாட்டு வாழ் இந்தியர்களும் உலகின் பல நாடுகளில் சிறந்த தொழில் முனைவோராக, தொழில் அதிபர்களாக வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவில் உள்ள இளைஞர்களுக்கு பெரும் ஊக்க சக்தியாக திகழ்கிறார்கள்.
- அவர்கள் தங்களுடைய முதலீட்டை மீண்டும் தாய் நாட்டின் வளர்ச்சிக்காக முதலீடு செய்யும்போது இந்தியா மூன்றாவது வளர்ச்சி பெற்ற பொருளாதர நாடாக விரைவில் வளர்ச்சி பெறும்.
- புதிய தொழில் தொடங்குவதற்கும் கல்வி, சுற்றுலா, மருத்துவம் போன்ற துறைகளில் முதலீடு செய்வதற்கும் புதுச்சேரி ஏற்ற இடமாக இருக்கிறது. புதுச்சேரியில் முதலீடு செய்பவர்களுக்கு

ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையில் அனுமதி விரைவில் வழங்குவதற்கான நடைமுறையை அரசு செயல்படுத்தி வருகிறது.

- புதிய தொழில் தொடங்குவதற்கு ஏற்ற உள்கட்டமைப்பு வசதிகள் புதுச்சேரியில் சிறப்பாக இருக்கின்றன. விமான நிலைய விரிவாக்கம், கடல் வழி போக்குவரத்து, மற்றும் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஆன்மீக சுற்றுலா, சுகாதார சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா என்று அனைத்து வகையிலும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளால் அதிகம் விரும்பப்படும் இடமாக, உலகில் அவசியம் பார்க்க வேண்டிய இடங்களில் பிரான்சில் உள்ள துலஸ் நகரத்தை அடுத்து புதுச்சேரி இரண்டாவது இடத்தில் இருக்கிறது.
- மாண்புமிகு பாரத பிரதமர் குறிப்பிட்டதை போல "பெஸ்ட்" புதுச்சேரியை உருவாக்குவதற்கான சூழலை அரசு மேற்கொண்டு வருகிறது. நீங்கள் இங்கே முதலீடுகள் செய்வதன் மூலம் பாரதப் பிரதமர் விரும்பும் விக்சித் பாரத் (சுதந்திரம் அடைந்த 100வது ஆண்டில் வளர்ச்சி பெற்ற பாரதம்) என்ற உருவாக்குவதில் நீங்களும் பங்கு பெற முடியும்.